பாடம் : சித்திரக்கலை

வாரம் : 02

தரம் : 09

தொகுப்பு : செல்வி.S.லுக்ஷனி
இ/நிவி/ஹவுப்பே த.வி

**தேர்ச்சி** : **பல்வேறுப்பட்ட ஊடகங்களைப் பயன்படுத்திச் சிற்பங்கள், செதுக்கு வேலைப்பாடுகளைச் செய்வார்.**

**தேர்ச்சி மட்டம்** : **பொளிதல் நுட்பமுறையைப் பயன்படுத்தப் புடைப்புச் செதுக்கலொன்றை வடிவமைப்பார்.**

**செயற்பாடு** : **வேடமுகமொன்றை வடிவமைப்போம்.**

**ஒப்படை** : **பின்வரும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுக.**

01. உங்கள் வீட்டிலுள்ள அல்லது இணையத்தளம், தொலைக்காட்சி போன்ற கட்புல ஊடகங்களை பாவித்து கொண்ட காணொலி அல்லது நிழற்படங்கள் என்பவற்றை பார்வையிட்டு வேடமுகங்கள் சிலவற்றை பெற்றுக்கொள்ளுங்கள்.

02. நீங்கள் பார்வையிட்ட காணொலி அல்லது நிழற்படத்தினை நன்கு அவதானிப்பதனூடாக, வேட முகத்தில் உபயோகப்படுத்தப்பட்டுள்ள வடிவங்கள், அலங்கார வேலைப்பாடுகள், வர்ணங்கள், பூரணப்பாடு, ஊடகப்பயன்பாடு, முப்பரிமாணம் என்பவற்றை அறிந்துக் கொண்டு, நீங்கள் விரும்பிய வேடமுகமொன்றினை தெரிவு செய்துக் கொள்ளுங்கள்.

03. ˙1” ரெஜிபோம் வகையில் 1 அடியினை பெற்றுக்கொள்க.நீங்கள் தெரிவு செய்த வேடமுகமொன்றினை பரும்படிப் படமாக வரைந்துக்கொள்க. அதனை ரெஜிபோம் மீது இரேகைகளால் வரைந்துக்கொள்க. பேப்பர் கட்டர் அல்லது பொருத்தமான உபகரணங்களைக் கொண்டு எதிர்பார்க்கும் வடிவத்தினை பெறும் பொருட்டு தேவையான பகுதிகளை வெளித்தள்ளியும், குடைந்து அகற்றியும் செதுக்கலை வடிவமைத்துக்கொள்க. (பெரியோர்களின் உதவியை பெற்றுக் கொள்க.)

04. நீங்கள் வடிவமைத்துக் கொண்ட வேட முகத்தில் கண், மூக்கு, வாய், காது, தலை போன்ற பகுதிகளை வெளித்தள்ளியும், குடைந்து அகற்றியும் செதுக்கல் முறையைப் பயன்படுத்தி வடிவமைத்துக் கொள்க.

05. நீங்கள் நிர்மாணித்த வேடமுகத்தினை நீர்த்தன்மையான வர்ணங்களை உபயோகித்து நிறந்தீட்டுக.